14.12.2023
அசல் வழக்கு எண்: 555/2013

வா.சா.1 சாட்சி குருநாதன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்கள் சொத்தை பிரதிவாதிகள் பட்டா மாற்றி இருப்பது செல்லாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்தா கிரைய சொத்தா என்றால் பூர்வீக சொத்தாகும். அதில் சர்வே எண். 140/5B சொத்தில் 15 செண்டை எனது தாயார், எனது சித்தப்பாவிடம் கிரையம் பெற்றுள்ளார். எனது தாயார் கிரையம் பெற்ற சொத்து எனது சித்தப்பாவின் பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். அவருக்கு பாகமாக கிடைத்த சொத்தாகும்.

தாவா 1வது மற்றும் 2 வது இலக்க சொத்துக்களின் பழைய சர்வே எண். 140/5 என்றாலும் அதன் மொத்த விஸ்தீரணம் 96 செண்டு என்றாலும் சரிதான். தாவா 3 வது இலக்க சொத்தின் மொத்த விஸ்தீரணம் 56 செண்டு என்றால் சரிதான். தாவா 3 வது இலக்க சொத்தை பொறுத்து உள்ள கூட்டுப்பட்டாவில் கண்ட பால்பண்டி என்பவர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது 2வது சித்தப்பா ஆகும். மேற்படி கூட்டுப்பட்டாவில் 2ம் பிரதிவாதி பெயர் உள்ளது என்றால் சரிதான். மேற்படி 3வது இலக்க சொத்தின் பட்டா எண் என்ன என்றால் ஞாபகம் இல்லை. தாவா 3 வது இலக்க சொத்தின் நான்குமால் என்ன என்றால் கிழக்கே கால்வாய் உள்ளது. மேற்கே அமிர்தம்மாளிடம் இருந்தது. தற்போது முத்துலெட்சுமி பெயரில் உள்ளது. வடக்கே முத்தையாதேவரிடம் உள்ளது. தெற்கே முத்துலெட்சுமி பெயரில் உள்ளது.

தாவா 1வது இலக்க சொத்தின் பட்டா எண் என்ன என்றால் 47

ஆகும். தாவா 1வது இலக்க சொத்தின் நான்குமால் என்ன என்றால் வடக்கே முத்தையாதேவர் உள்ளார். தெற்கே எனது அம்மா செல்லம்மாள் உள்ளார். மேற்கே சுடுகாடு உள்ளது. கிழக்கே முத்தையாதேவர் உள்ளார்.

தாவா 2 வது இலக்க சொத்தின் பட்டா எண் என்ன என்றால் 167 ஆகும். தாவா 2 வது இலக்க சொத்தின் நான்குமால் என்ன என்றால் கிழக்கே செல்லம்மாள், மேற்கே வாய்க்கால் உள்ளது. வடக்கே மற்றும் தெற்கே அய்யம்மாள் புஞ்சை உள்ளது.

எனது தாத்தா பெயர் என்ன என்றால் நல்லாதேவர் ஆகும். எனது தாத்தாவிற்கு எத்தனை வாரிசுகள் என்றால் 4 ஆண் மக்கள் மற்றும் 1 பெண் ஆவார். அவர்கள் பெயர்கள் என்ன என்றால் குருசாமி, அழகுமலை, பால்பாண்டி, மகாலிங்கம் மற்றும் முத்துப்பிள்ளை ஆகும். எனது தாத்தாவிற்கு 5 ஆண் மக்கள் என்றாலும் மற்றொருவர் பெயர் போஸ் என்றாலும் அதை நான் மறைக்கிறேன் என்றாலும் போஸ் என்ற சித்தப்பா நான் சிறு வயதாக இருக்கும்போதே இறந்துவிட்டதாக சொல்வார்கள்.

தாவா சொத்துக்களை எனது அப்பாவும், அவருடன் பிறந்தவர்களும் எப்போது எவ்வாறு பாகம் பிரித்துகொண்டார்கள் என்று தெரியுமா என்றால் எப்போது என்று தெரியாது. வாக்கறலாக பாகம் பிரித்தார்களா அல்லது எழுத்து மூலமாக பாகம் பிரித்தார்களா என்று எனக்கு தெரியாது. எனது தாயார் பெயர் என்ன என்றால் செல்லம்மாள் ஆகும். செல்லம்மாளுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் நானும், எனது அக்கா முத்துலெட்சுமி ஆகும். அழகுமலைக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 1 பெண் பிள்ளை இருப்பதாக சொல்வார்கள். 1ம் பிரதிவாதி மேற்படி அழகுமலையின் மனைவி என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி அழகுமலையின் மகள் என்றால் சரிதான்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி வா.சா.1 குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)